# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● பிப்ரவரி 27 2023

Weekly E-paper ● February 27, 2023




## மத நல்லிணக்க, சமூக ஒற்றுமை மாநாடு

## ஜே.என்.யு. மாணவர்களைத் தாக்கும் ஏபிவிபி குண்டர்கள்

நேர்காணல்

## மனிதர்களாக மாறுவார்களா?

தலையங்கம்

## என்று முடியும் இந்தப் போர்?

ஜனனி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● பிப்ரவரி 27 2023 Weekly E-paper ● February 27, 2023


## திராவிட இயக்கத் தமிழர் பேரவை இளைஞர் அணி மற்றும் திராவிட நட்புக் கழகம் ஒருங்கிணைக்கும் மத நல்லிணக்க, சமூக ஒற்றுமை மாநாடு

### 26 பிப்ரவரி 2023




**தீர்மானம் -1**

மதவெறியை மாய்த்திடவும் மனித நேயம் காத்திடவும், தமிழ்நாட்டின் முதலமைச்சரும் திராவிட மாடல் அரசை வழிநடத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மாண்புமிகு தளபதி அவர்கள் முன்முயற்சி எடுத்து இந்தியா முழுவதும் உள்ள எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்து, வரும் 2024 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கிற நாடாளுமன்றத் தேர்தலில் இப்போது இருக்கும் பாசிச ஒன்றிய பா.ஜ.க அரசை வீழ்த்தி ஜனநாயகமும் மத நல்லிணக்கமும் கொண்ட ஒரு சமூக நீதி அரசை இந்திய ஒன்றிய அரசாக அமர்த்திட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று இம்மாநாடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.




**தீர்மானம் -2**

இந்தியாவில் வாழும் சிறுபான்மை மக்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் அழித்திடும் வகையில் மதமாற்றத் தடைச் சட்டம், பொதுக் குடிமைச் சட்டம் ஆகியனவற்றை விரைவில் நிறைவேற்ற ஒன்றிய அரசு முயற்சி செய்து வருகிறது.

இது போன்ற கொடுங்கோன்மை சட்டங்களை ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசு கைவிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதோடு ஒன்றிய பாசிச பாஜக அரசின் மதவெறிப் போக்கினை இம்மாநாடு கடுமையாகக் கண்டிகிறது.

**தீர்மானம் -3**

20/4 இல் பாரதிய ஜனதா அரசு பதவி ஏற்றது முதல் மதவாத வெறுப்புக் கருத்துக்களை நாடு முழுக்கப் பரப்பி வருகிறார்கள். அத்துடன் பெரியாரிய அம்பேத்கரிய, மார்க்சிய கருதீதுரையாளர்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விடப்படுவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் வரப்போகிற நாடாளுமன்றத் தேர்தலில் பாசிச பா.ஜ.க-வை வீழ்த்திட சாதி, மொழி, மதம், இனம் கடந்து நல்லிணக்கத்தோடு அனைவரையும் ஒன்றிணைக்கும் பணியில் பெரியாரிய அம்பேதீகரிய, மார்க்சிய உணர்வாளர்கள் முன்வர வேண்டும் என இம்மாநாடு அறைகூவல் விடுக்கிறது. ●

# ஜே.என்.யு. மாணவர்களைத் தாக்கும் ஏபிவிபி குண்டர்கள்

**தோழர் தமிழ் நாசர், ஜே.என்.யு. மாணவர்**

**அண்மையில் ஜே.என்.யு.வில் நடந்த வன்முறை குறித்து இரண்டு தரப்பினருக்கு இடையேயான மோதல் என்று செய்திகள் வெளியிடப்பட்டன. இதில் எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது?**




இரண்டு தரப்பிற்குமான கைகலப்பு என்பது தொடர்ச்சியாக ஜே.என்.யு. வில் நடக்கும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து வட இந்திய ஊடகங்கள் வெளியிடும் செய்தியாகும். இது இரண்டு தரப்பினருக்கான கைகலப்பு கிடையாது. உண்மையில் ஜே.என்.யு. மாணவர்கள் மீது ஏபிவிபி மாணவர்கள் மற்றும் வெளியில் இருந்து அழைத்துவரப்பட்ட குண்டர்கள் மூலம் தொடர்ச்சியாக நடத்தப்படும் தாக்குதல். நிறைய மாணவர் அமைப்புகள் இருக்கின்றன. பல்வேறு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும். அதில் ஏதாவது மாற்றுக் கருத்து இருந்தால் அதைச் சொல்வதற்கான ஜனநாயகத்தளம் இங்கே இருக்கின்றது. இங்கு யார் வேண்டுமானாலும் கருத்தைச் சுதந்திரமாக சொல்லலாம். மாற்றுக் கருத்துகளோடு இயங்கும் பல்வேறு அமைப்புகள் இங்கே இருக்கின்றன. மாற்றுக்கருத்தை இன்னொரு கூட்டம் நடத்தி வெளிப்படுத்துவதுதான் இங்குள்ள வழக்கம். ஜே.என்.யு. ஆய்வுப் பல்கலைக்கழகமாக இருப்பதால் பெரும்பான்மையினர் ஆய்வுப் படிப்பை மேற்கொள்பவர்கள்தான். முதுநிலைப் படிப்புகள் கொஞ்சம் பரவலாக இருக்கும். இளநிலைப் படிப்புகள் வெகு குறைவாகவே இருக்கும். பள்ளி முடித்துவிட்டு கல்லூரி சேரும் இளம் மாணவர்கள் உணர்வுவயப்பட்டு மோதிக் கொள்வது போல் அல்ல. இங்கு ஒரு கருத்து சொல்லப்பட்டால் அதன் மீது கேள்விகள் எழுப்பப்படும், விவாதங்கள் உரையாடல்கள் நடைபெறும். இதுதான் ஜே.என்.யு.வின் கலாச்சாரம். வன்முறை என்பது ஜே. என்.யு.விற்கு எதிரான கலாச்சாரம். அதைச் செய்கிற ஒரே ஒரு அமைப்பு ஏபிவிபி மட்டும்தான்.

**வன்முறையில் ஈடுபடும் ஏபிவிபி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லையா?**

வன்முறையில் ஈடுபடும் ஏபிவிபியினர் மீது ஒரே ஒரு முறை நடவடிக்கை எடுத்தால் அவர்கள் வன்முறை நின்றுவிடும். ஆனால் ஒருவர் மீது கூட நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. காவல்துறையில் புகார் கொடுக்கப்பட்டு ஐந்து நாள்கள் ஆகியும் இன்னும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் இன்னும் எங்களை அழைத்து எந்த விசாரணையும் நடத்தவில்லை துணைவேந்தரைச் சந்திப்பதற்குக்கூட அவர்கள் நேரம் கொடுக்கவில்லை. ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். படங்களை யார் உடைத்தார்கள் என்பதை அறிய அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். வன்முறை குறித்து விசாரிக்க என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. நடவடிக்கை எடுக்கும் முனைப்பு இருப்பதாக பார்க்க முடியவில்லை.

**தமிழ்நாட்டிலிருந்து முதல்வர் கண்டனங்களைத் தெரிவித்தார். திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜே.என்.யு. வந்தார்கள். இந்நடவடிக்கைகள் என்ன விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன?**

பல காலமாக இது போன்ற வன்முறைகள் நடந்து கொண்டிருக்கிற நிலையில், மாணவர்களே சோர்வடைந்திருந்தனர். தமிழ்நாட்டில் இருந்து இவ்வளவு பெரிய ஆதரவு வந்தது யாரும் எதிர்பார்க்காதது. முதலமைச்சரை கண்டன அறிக்கை கொடுத்தது பெரிய ஆறுதலையும் ஆதரவையும் தந்தது. தமிழக முதல்வரின் கண்டனத்தின் மூலம் நாடு முழுவதும் ஏபிவிபியினரின் வன்முறை கவனம் பெற்றிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாக வந்தார்கள். எந்த இடத்தில் பெரியார் படத்தை உடைத்தார்களோ அதே இடத்தில் மீண்டும் படத்தை வைக்கத் துணை நின்றார்கள். மற்ற மாநில மாணவர்கள் தமிழ்நாட்டைப் போன்று நம் மாநிலங்களிலும் ஆதரவு வராதா என்று எதிர்பார்க்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் வந்ததால் துணைவேந்தர் எங்களையும் அழைத்துப் பேசினார். நாங்கள் கொடுத்த புகாரையும் பெற்றுக் கொண்டார். நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்தது பல்கலைக்கழக நிர்வாகத்திற்குப் பெரிய அழுத்தத்தைக் கொடுத்திருக்கிறது. வன்முறையாளர்கள் மீது நடவடிக்கை எடுத்தால்தான் இனி மாணவர்கள் அந்தக் களத்தில் தொடர்ந்து செயல்பட முடியும். ஜே.என்.யு. போன்ற பொது பல்கலைக்கழகங்களில் ஏபிவிபியின் வன்முறை தொடர்ந்தால் எளிய மக்கள் இயல்பாகவே இக்கல்வி நிலையங்களைத் தவிர்க்க தொடங்கி விடுவார்கள். வலதுசாரிகளே அதிகமாக சேர்க்கப்படுகிறார்கள். எனவே இந்தத் தாக்குதல் என்பது கல்வியின் மீதான தாக்குதல். பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட பட்டியல் இன மக்கள், குறிப்பாக வட மாநிலங்களில் இல்லாத மற்ற மாநில மாணவர்கள் மீதான தாக்குதல். தமிழ்நாட்டில் எப்படி ஏவிபிக்கு அனைத்துத் தரப்பினரும் கண்டனங்களைப் பதிவு செய்தார்களோ அதுபோல் எல்லா மாநிலங்களிலிருந்தும் கண்டனக் குரல்கள் வந்தால் தான் ஏபிவிபியின் வன்முறை தடுக்கப்பட முடியும்.

நேர்கண்டவர் : **உதயகுமார்**

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## மனிதர்களாக மாறுவார்களா?

அரசியலமைப்புச் சட்டம் மதச்சார்பின்மை கொள்கைகளுக்கு எதிராக ஆளுநர் தொடர்ந்து பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகிறார். இந்தியாவின் வளர்ச்சிக்கு சேதம் ஏற்படுத்திய கருத்துக்கள் என்று மார்க்சியத்தையும் பூசுவதின் கொள்கைகளையும் டார்வின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டையும் அண்மையில் நடந்த நிகழ்வில் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இங்கு நிலவும் வறுமை ஏற்றுத்தாழ்வு ஆகியவற்றுக்கு இந்தியாவின் ஜாதிய அமைப்போ அரசியல் கொள்கைகளோ காரணம் இல்லையாம்.

உலகின் மற்ற எல்லா கருத்தியல்களும் கொள்கைகளும் தவறானவை, தாங்கள் ஏற்படுத்திய சனாதான அமைப்பு முறையே சரியானது என்று சொல்லக்கூடிய ஒரே ஒரு கூட்டம் பார்ப்பனியக் கூட்டம்தான்.

பார்ப்பனிய ஆதிக்கத்தை நிலை நாட்டும் ஒரே எண்ணத்தோடு செயல்படுவது மட்டுமே தன்னுடைய கடமையாகக் கொண்டிருக்கிறார் ஆளுநர். அரசியலமைப்பை அவர் சட்டை செய்வதில்லை.

சனாதானப் பெருமை பேசுவது பார்ப்பனர்களின் வாடிக்கை. அதே பழைய கதையைத்தான் ஆளுநரும் சொல்லியிருக்கிறார்.

எத்தனை முறை சொன்னாலும் ஏதோ ஒரு புதிய சிந்தனையை முன் வைப்பது போன்று சொல்லும் கலை பார்ப்பனர்களுக்கே உரியது. "அறிவியல்", "சமத்துவம்", "சிந்தனை" இவையெல்லாம் எந்த வடிவில் இருந்தாலும் அவர்களுக்கு ஒவ்வாத சொற்களாகும். இந்தச் சொற்களைக் கேட்டாலே அதிர்ந்து விடுவார்கள்.

எந்தச் சிந்தனைகள் எல்லாம் இந்தியாவின் வளர்ச்சிக்குச் சேதம் ஏற்படுத்தியிருக்கின்றன என்று அவர்கள் சொல்கிறார்களோ, அந்தச் சிந்தனைகள்தான் பார்ப்பனர் அல்லாதோருக்குத் தேவையானவை என்று நாம் எளிமையாக விளங்கிக் கொள்ளலாம்.

எந்தப் பொறுப்பில் இருந்தாலும் அந்த பொறுப்பை உணர்ந்து செயல்படாது பார்ப்பன ஆணவத்தோடு மட்டுமே பார்ப்பனர்கள் செயல்படுகிறார்கள். அதில் ஆளுநரும் ஒருவர்.

மனிதர்களாக மாறுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். காலங்கள் மாறுகின்றன. ஆனால் பார்ப்பனர்கள் பார்ப்பனர்களாகவே இருக்கிறார்கள். மனிதர்களாக எப்போது மாறுவார்கள்?

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408





இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் ஒருங்கிணைத்த புகழ்வணக்கம் எட்டாவது நிகழ்வு பிப்ரவரி 22ஆம் தேதி ட்விட்டர் ஸ்பேசஸ் தளத்தில் நடைபெற்றது. சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர் மகேந்திரன் அவர்களும், சத்தியவாணிமுத்து அம்மையார் குறித்து திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணைத் தலைவர் தோழர் பொள்ளாச்சி உமாபதி அவர்களும், நடேசனார் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் திரு.தமிழன் பிரசன்னா அவர்களும் உரையாற்றினர்.

# என்று முடியும் இந்தப் போர்?

## தோழர் ஜனனி



கொரோனாவில் இருந்து மூன்று ஆண்டு போராட்டத்திற்குப் பின் மனித சமூகம் மீண்டிருந்தது. உலக நாடுகள் அனைத்தும் தங்கள் பொருளாதாரத்தை உயர்த்தும் முயற்சியில் ஈடுபட்டனர். அந்த வேளையில்தான் ரஷ்யா உக்ரைன் மீது பிப்ரவரி 24 2022 அன்று போரைத் தொடங்கியது. ஒரு வாரத்திற்குள் முடிவுக்கு வரவேண்டும் என்று எதிர்பார்த்த போர் ஓர் ஆண்டு கடந்தும் இன்னும் முடியவில்லை. ரஷ்யா சைனா ஒரு பக்கமும் அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் மறுபக்கமும் இருந்து கொண்டு தங்களுக்கு இடையேயான நீண்ட காலப் பணி போரின் களமாக உக்ரைனை வைத்துக் கொண்டுள்ளனர்

போரின் பாதிப்பு உலக நாடுகள் அனைத்தின் பொருளாதாரத்தையும் வலுவாக தாக்கியிருக்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலை கணிசமாக உயர்ந்திருக்கிறது.ரஷ்யா மற்றும் உக்ரைன் அதிகமாக ஏற்றுமதி செய்யும் பார்லி மற்றும் சோளத்தின் ஏற்றுமதி குறைந்துள்ளது. உக்ரைனின் 60% மக்கள் வறுமையில் வாழ்கின்றனர். 6.3 மில்லியன் உக்ரைன் மக்கள் அகதிகளாக ஐரோப்பாவில் பல நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். $139 பில்லியன் மதிப்பிலான உக்ரைன் கட்டமைப்புகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 1.8 லட்சம் ரஷ்யா மற்றும் ஒரு லட்சம் உக்ரைன் படைவீரர்கள் காயமடைந்தோ அல்லது இறந்திருக்கலாம் என்றோ கூறப்படுகிறது.

கடந்த 20ஆம் தேதி உக்ரைனுக்கு வந்திருந்த அமெரிக்க அதிபர் ஜோபைடன் ஓராண்டுக்கு முன்பு உக்ரைன் மீதான தாக்குதல்கள் தொடங்கப்பட்டது. உக்ரைன் வீழ்ந்து விடும் என சிலர் கூறினர்.ஆனால் ஓராண்டாக உக்ரைன் கம்பீரமாக எழுந்து நின்று போராடி வருகிறது. அமெரிக்கா மட்டுமில்லாமல் ஒட்டுமொத்த உலக நாடுகளும் ஆதரவாக நிற்கின்றன .உலக வரைபடத்தில் இருந்து உக்ரைனை அளித்து விட வேண்டும் என்று ரஷ்யா விரும்பியது. போரில் எளிதாக வெற்றி பெற்று விடலாம் எனப் புதின் கனவு கண்டார். ஆனால் அது எதுவும் நடக்கவில்லை. அவரின் கனவு தகர்ந்து விட்டது. ரஷ்ய ராணுவம் ஆக்கிரமித்து வைத்த பகுதிகளில் பாதி மீட்கப்பட்டிருக்கிறது.

மேலும் உக்ரைன் மக்களின் நலனுக்காக அமெரிக்க பட்ஜெட்டில் தாராளமாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. உக்ரைன் இராணுவத்திற்கு அதிநவீன ஏவுகணைகள், ரேடர்கள், கவச வாகனங்கள் வழங்கப்படும் எனவும் கூடுதலாக 500 மில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுதங்கள் வழங்கப்படும் எனவும், அடுத்த ஒரு வாரத்தில் இரஷ்யாவுடன் தொடர்புடைய அமைப்புகள் நிறுவனங்கள் மீது மேலும் கடுமையான பொருளாதார தடைகள் விதிக்கப்படும் எனவும் கூறியுள்ளார் . உக்ரைன் போரை நிறுத்த வேண்டும் என விரும்பினாலும் அமெரிக்கா விடுவதாக இல்லை. போரைத் தொடங்கிய இரஷ்யா தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இன்னும் எத்தனை உயிர்கள்?

இன்னும் எத்தனை அகதிகள்?

இன்னும் எத்தனை காயமுற்ற உடல்கள்?

இன்னும் எத்தனை ஆதரவற்ற குழந்தைகள்?

என்று முடியும் இந்தப் போர்?

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian